# HOLY TRINITY INTERNATIONAL SCHOOL

**Melpalai, Edaicode Post, K.K. District.**

**GRADE –IX**

**தமிழ்**

**இயல்-1**

**கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் விடைகளை நன்றாகப் படித்து எழுதி பழகுக.**

## திராவிட மொழிக் குடும்பம்

நம் மொழி முன்னைப் பழமைக்குப் பழைமையும் பின்னைப் புதுமைக்குப் புதுமையும் கொண்டது. தமிழ் என்ற சொல்லிலிருந்துதான் திராவிடா என்ற சொல் பிறந்தது என்பர் மொழி ஆராய்ச்சியாளர்கள். திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ். பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது. தற்போதய திராவிட மொழிகள் மொத்தம் 28 ஆகும். தென்னிந்திய மொழிகள் அனைத்தையும் இணைத் தமிழியன் எனப் பெயரிட்டவர் ஹோக்கர். தமிழ் பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதப்பட்ட ஆண்டு 1856. இத்திராவிட மொழிக்குடும்பம் நில அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. திராவிட மொழிகளின் தாய்மொழியாகக் கருதப்படுவது தமிழ். திராவிடம் என்ற சொல்லை முதன்முதலில் குறிப்பிட்டவர் குமரில பட்டர். கண் என்னும் சொல் மலையாளத்தில் கண்ணு என்று வழங்கப்பெறும். அத்துடன் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.

**வினாக்கள்**

1.தமிழ் எச்சொல்லிலிருந்து பிறந்தது என்கின்றனர் மொழி ஆராய்சிசியாளர்கள்.

அ.தெலுங்கு ஆ திராவிடா இ.கன்னடம் ஈ.துளு

விடை :ஆ திராவிடா

2.தற்போதய திராவிட மொழிகள் மொத்தம் எத்தனை?.

அ.23 ஆ.27 இ.29 ஈ.28

விடை :ஈ.28

3.தென்னிந்திய மொழிகள் அனைத்தையும் இணைத் தமிழியன் எனப் பெயரிட்டவர் யார்?

அ.ஹோக்கன் ஆ.வில்லியம் ஜோன்ஸ் இ.கிரிம் ஈ.கால்டுவெல்

விடை :அ.ஹோக்கன்

4.திராவிட மெரிழிகளின் ஒப்பிலக்கணம் எழுதப்பட்ட ஆண்டு எழுதுக.

அ.1816 ஆ.1856 இ.1836 ஈ.1858

விடை :ஆ.1856

5.இத்திராவிட மொழிக்குடும்பம் நில அடிப்படையில் எத்தனை வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது

அ.இரண்டு ஆ.ஐந்து இ.மூன்று ஈ.எட்டு

விடை :இ.மூன்று

6.திராவிட மொழிகளின் தாய்மொழியாகக் கருதப்படுவது

அ. தமிழ் அ.சமஸ்கிருதம் இ.தெலுங்கு ஈ.கன்னடம்

விடை :அ. தமிழ்

7. கண் என்னும் சொல்லை மலையாளத்தில் எப்பெயரால் அழைப்பர்?

அ.கண்ணு ஆ.கண்ண இ.கன்னு ஈ.கெண்

விடை :அ.கண்ணு

8. திராவிடம் என்ற சொல்லை முதன்முதலில் குறிப்பிட்டவர் எவர்?

அ.குமரில பட்டர் ஆ.ஈராஸ்பாதிரியார் இ.கால்டுவெல் ஈ.ஹோக்கன்

விடை :அ.குமரில பட்டர்

9.பிற திராவிட மொழிகளைவிட............. பெருந்துணையாக அமைந்துள்ளதுதமிழ்.

அ.காலத்திற்குப் ஆ.ஒப்பியல் ஆய்வுக்குப் இ.வேறுபடுதலுக்குப் ஈ.தனிப்

விடை :ஆ.ஒப்பியல் ஆய்வுக்குப்

10.தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப்...........கொள்ளும் தமிழ்.

அ.தரம்தாழ்த்திக் ஆ.தனதாக்கிக் இ.புதுப்பித்துக் ஈ.வேறுபாடு

விடை :இ.புதுப்பித்துக்

**குறுவினாக்கள்**

1. மொழி என்றால் என்ன?

தமக்குத் தோன்றியக் கருத்துக்களைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும்.

மனிதஇனம் வாழ்ந்த இடஅமைப்பும் இயற்கை அமைப்பும் வேறுபட்ட ஒலிப்பு முயற்சிகளை உருவாக்கத்தூண்டின.இதனால் பல மொழிகள்உருவாயின.

2. திராவிடமொழிக்குடும்பங்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன?

உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் பிறப்பு, தொடர்பு ,அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில் மொழிக்குடும்பங்கள் மூன்றாகப் பலவாகப்பிரிக்கப்பட்டுள்ளன. அவை தென்திராவிட மொழிகள், நடுதிராவிட மொழிகள் ,வடதிராவிட மொழிகள் முதலியனவாம்.

3. திராவிட நாகரீகம் என்றால் என்ன?

உலகில் குறிப்பிடத்தக்க பழமையான நாகரீகங்களுள் இந்திய நாகரீகமும் ஒன்று. மொகஞ்சதாரோ - ஹரப்பாஅகழ்வாய்வுக்குப் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் திராவிட நாகரீகம் என்று அறிஞர்கள் கூறுவர்.

4. திராவிடப் பெருமொழிகள் யாவை?

தமிழ் மலையாளம், தெலுங்கு ,கன்னடம் ஆகியவை திராவிடப்பெருமொழிகள் ஆகும்.

**சிறுவினா**

1. திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள் யாவை?

சொற்களின் இன்றியமையாப்பகுதியான வேர்ச்சொல் என்பது அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால் அவை பொதுவான அடிச்சொற்கள் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

**குறில் நெடில் வேறுபாடு:**

திராவிட மொழிகளில் உயிர் எழுத்துக்களில் உள்ள குறில் நெடில் வெறபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

அடி – குறில்

ஆடி – நெடில்

வளி – குறில்

வாளி – துளு

**பால் பாகுபாடு**

திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது. ஆனால் வடமொழியில் இவ்வாறு அமையவில்லை.

திராவிட மொழிக்குடும்பம் என்ற பகுப்பு உருவாகுவதற்கு ஒரு வரலாறு இருக்கிறது. தமிழ் கன்னடம் தெலுங்கு ஆகிய மொழிகள் சமஸ்கிருத மொழியிலிருந்து உருவானவை என்ற கருத்து அறிஞர் பலரிடையே நிலவி வந்தது.

அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் என்பார் வடமொழியை ஆராய்ந்து மற்ற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது வடமொழி என முதன் முதலில் குறிப்பிட்டார். தொடர்ந்து 1816 ஆம் ஆண்டில் பேராசிரியர்கள் பாப், ராஸக்,கிரிம முதலானோராலும் மொழி சார்ந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

**நெடுவினா**

1. தமிழின் தனித்தன்மைகள் யாவை?

- தொன்மையும் இலக்கிய இலக்கண வளமும் உடையது தமிழ் மொழியாகும்.
- இலங்கை மலேசியா, சிங்கப்பூர், இந்தோனிசியா, பிஜித்தீவு ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென்ஆப்பிரிக்கா, மொரிசியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ் மொழி.
- ஏனைய திராவிட மொழிகளை விடவும் தமிழ்மொழி தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழியாகும்.
- திராவிட மொழிகளுள் பிற மொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும்மொழி தமிழே ஆகும்.
- தமிழ்மொழி திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.
- ஒரேப் பொருளைக் குறிக்கப் பலசொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழேயாகும்.
- இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.
- தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள் ஒலி இடம்பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன.

## தமிழோவியம்

ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களிலும் படைப்புகளை வெளியிட்டுள்ளார். கைக்கூ, சென்ர்யூ,லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதைநூல்களைத் தந்துள்ளார். இவரது வணக்கம் வள்ளுவ என்னும் கவிதை நூலுக்கு 2004 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.மானிட மேன்மையைச் சாதித்திட குறள் மட்டும் போதுமே என்றவர்.குறைகள் சொல்வதை விட்டுவிட்டுப் புதுக் கோலம் புனைந்து மகிழ்வோம் என்று கூறியவர். இவர் எழுதிய தமிழோவியம் இயற்கை அழகை இனிதேக் காட்டும். இந்நூல் கவிதை உலகின் எழிலோவியமாகத் திகழ்கின்றது.

ஏன் எதற்கு என்று வீறிட்டுக் கேட்டு வருகின்ற நீதி ஏந்திய தீபமாய்ப் பாடல்கள் அமைந்திருக்கும்.

**ஒருமதிப்பெண் வினாக்கள்**

1.மானிட மேன்மையைச் சாதித்திட எவை மட்டும் போதும்

அ.தமிழ் ஆ.கவிதை இ.விருது ஈ.குறள்

விடை :குறள்

2. சாகித்திய அகாதமி விருது பெற்ற ஈரோடு தமிழன்பன் எழுதிய நூல் எது?

அவணக்கம் வள்ளுவ ஆ.சுதேசமித்திரன் இ.குழந்தை இலக்கியம்

ஈ.கள்வனின் காதலி

விடை : வணக்கம் வள்ளுவ.

3.கைக்கூ, செரின்யூ, விமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் தமிழை எழுதியவர்.

அ.கண்ணதாசன் ஆ.ஈரோடு தமிழன்பன் இ.ப.விஜய் ஈ.பாரதிதாசன்

விடை :ஈரோடு தமிழன்பன்

4………………..சொல்வதை விட்டுவிட்டுப் புதுக் கோலம் புனைந்து மகிழ்வோம்.

அ.புதுமைகள் ஆ.நிறைகள் இ.குறைகள் ஈ.விடைகள்

விடை : குறைகள்

5.ஈரோடு தமிழன்பன் சாகித்திய அகாதமி விருது பெற்ற ஆண்டு எழுதுக.

அ.2004 ஆ.2005 இ.2006 ஈ.2008

விடை :2004.

6.கோலம் என்பதன் பொருள் எழுதுக.

அ.அழகு ஆ.குழைதல் இ.உடைத்தல் ஈ.வடிவம்

விடை :வடிவம்

7.நெஞ்சம் என்பதன் பொருள் எழுதுக.

அ.அறிவு ஆ.உள்ளம் இ.தூற்றுதல ஈ.ஏமாற்றம்

விடை :உள்ளம்

8.தீபம் என்பதன் என்பதன் பொருள் எழுதுக.

அ.அன்பு அ.ஒளி இ.கட்டளை ஈ.செயலாற்றுதல்

விடை :ஒளி

**குறுவினாக்கள்**

1. தமிழோவியம் கவிதைகளில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.

"காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!"

உலகம் தோன்றிய நாள்முதல் தோன்றிய தமிழ்மொழி இன்றுவரை நிலைத்து நிற்பதோடு நில்லாமல் நாளும் வளரும் தமிழாய் உயர்ந்திருக்கின்றது நம் தமிழ்மொழி என்பதே என்னை ஈர்த்த அடிகள்.

2. "அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள் " - இலக்கணங்களின் பாடுபொருள்களாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை?

காலத்தினால் அழியாத நிலைத்து நிற்கும் தமிழ்மொழியானது அக இலக்கியமாகவும், புற இலக்கியமாகவும், வளர்ந்து தமிழை வளப்படுத்தின.

அவ்விலக்கியங்கள் நவிலும் வண்ணம் இலக்கணங்கள் இனிக்கும் தன்மையுடையவை.

3. தமிழோவியம் நூற்குறிப்பு எழுதுக.

ஈரோடு தமிழன்பன் எழுதிய தமிழோவியம் இயற்கை அழகை இனிதே காட்டும் காவியம்.ஒரு பூவின் அழகையும் ஒரு குழந்தையின் புன்சிரிப்பையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவையில்லை.இதிலுள்ள பாடலும் அப்படித்தான்.

இந்நூல் கவிதை உலகின் எழிலோவியமாகத் திகழ்கின்றது.

**சிறுவினா**

**1.புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் -உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.**

*விரலை மடக்கிக் கொண்டு வீணையில் இசை வரவில்லை என்று சொல்வது போல் பிறரைக் குறைசொல்வதை விட்டுவிட்டுப் புதுவடிவிலும், புதுப்பொலிவுடனும் தமிழை வளர்ப்போம்.

*முத்தமிழாய் இருக்கும் நற்றமிழை அறிவியல் தமிழாய் ,கணினித் தமிழாய், கணினித் தமிழாய் இணையத்தமிழாய்ப் புதுவடிவில் வளர்த்தெடுப்போம்.

*மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை, தொழில் நுட்பத்துறை போன்ற புதிய துறைகளில் புதிய புதிய சொற்றொடர்களை உருவாக்கித் தமிழை மேலும் தளிர்க்கச் செய்வோம்.

**நெடுவினா**

1. **தமிழோவியம் என்னும் கவிதை மூலம் ஈரோடு தமிழன்பன் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**அழியாத்தமிழ்:**

*காலம் பிறப்பதற்கு முன்பே தனிச்சிறப்புடன் பிறந்ததே நம் தமிழ்மொழி.

முக்காலத்திற்கும் அழியாத தன்மை கொண்டு என்றும் நிலைத்து நிற்கக் கூடியது.

அகம், புறம் பற்றிய இலக்கியங்களாகத் தமிழை வளப்படுத்தியது தமிழ்.

**வளம் செழிக்கும் சோலை:**

எதற்கும் ஒப்பிட்டுக் கூற இயலாத காப்பியங்கள் இம்மொழியில் பூக்களாகவும், நிறைந்த சோலையாகவும் வளங்கொளித்து நம் இதயங்களில் ஊர்வலங்களை நடத்தி வருகின்றன.

**புதிய தீபம்:**

ஏன் எதற்கு என்று வீறிட்டுக் கேட்டு வருகின்ற நீதி ஏந்திய தீபமாய்ப் பாடல்கள் அமைந்திருக்கும்.

மானுடத்தின் மகத்துவத்தைச் சாதித்துக் காட்டத் திருக்குறள் நூல் ஒன்றே போதும்.

**புதிய சிந்தனை**

சித்தர்களும் மற்றவர்களும் சமுதாயத்தின் தீமைகளை அறுக்கின்ற புத்தம் புதுச் சிந்தனைகளை நித்தம் நித்தம் நம் இதயங்களில் பாய்ச்சுகின்றனர்.

தமிழ்விடுதூது

**.தித்திக்கும் தெள் அமுதாய்த் தெள் அமுதின் மேலான**
**முத்திக் கனியே என் முத்தமிழே – புத்திக்குள்**
**உண்ணப் படும் தேனே உன்னோடு உவந்து உரைக்கும்**
**விண்ணப்பம் உண்டுவிளம்பக்கேள் - மண்ணில்**

**வினாக்கள்**

1.இப்பாடல் இடம்பெறும் நூல் எது?

அ.குற்றாலக்குறவஞ்சி ஆ.கலிங்கத்துப்பரணி இ.தமிழ்விடுதூது ஈ.பெரியபுராணம்

விடை :தமிழ்விடுதூது

2.இப்பாடலினை இயற்றியவர் யார்?

அ.செயங்கொண்டார் ஆ.நச்சினார்கினியர் இ.பரிமேலழக ஈ.ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை.

விடை :ஈ.ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை.

3.உவந்துரைக்கும் பிரித்து எழுதுக.

அ.உவந்து + புரைக்கும் ஆ.உவந்து+ ரைக்கும்

இ.உவந்து + உரைக்கும் ஈ.உவந்து + குரைக்கும்

விடை:இ.உவந்து + உரைக்கும்

4.விளம்பக்கேள் பொருள் எழுதுக.

அ.கூறுவதைக் கேட்பாயாக ஆ.கூறுவதைப் புரிந்துகொள்வாயாக
இ.கூறுவதைச் சொல்வாயாக ஈ.புரிந்துகொண்டு செல்வாயாக.
விடை :கூறுவதைக் கேட்பாயாக.
5.தித்திக்கும் தெள்ளமுதாய் விளங்குவது எது?
அ.கன்னடம் ஆ.தெலுங்கு இ.இந்தி ஈ.தமிழ்
விடை :ஈ.தமிழ்

**குறுவினாக்கள்**

1. தமிழ்விடுதூது யார் மீது பாடப்பட்டது?

மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மேல் காதல் கொண்ட பெண் ஒருத்தி தன் காதலைக் கூறி வருமாறு தமிழைத் தூது விடுவதாக அமைந்ததே தமிழ்விடுதூது ஆகும்.

2. பத்துக்குணங்கள் யாவை?

செறிவு ,தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை,காந்தம் ,வலி, சமாதி ஆகியன பத்து குணங்கள் ஆகும். தாயுமானவர் எழுதிய பராபரக்கண்ணியும் இவ்வகையே ஆகும்.

3. எண்வகை வனப்புகள் யாவை?

அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இயைபு ஆகியன எட்டும் வனப்புகள் ஆகும் எனத் தழிழ்விடுதூது கூறுகின்றது.

4. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

கண்ணி- இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர். அதே போல் தமிழில் பூக்கண்ணிபோல் இரண்டிரண்டு அடிகளில் எதுகையால் தொடுக்கப்படுவது கண்ணி ஆகும்.

**சிறுவினாக்கள்**

1. தமிழ்விடுதூது நூற்குறிப்பு எழுதுக.

தமிழில் உள்ள 96 வகைச்சிற்றிலக்கியங்களுள் ஒன்று தூது இலக்கியம்.
இது வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.
தூது இலக்கியங்களுள் ஒன்று தமிழ்விடு தூது ஆகும்.
இந்நூலின் ஆசிரியர் யாரென அறிந்துகொள்ள இயலவில்லை.
தமிழ்விடுதூது மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூது விடுவதாக அமைந்துள்ளது.
கலிவெண்பாவால் இப்பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.
தமிழின் சிறப்புகளைக் குறிப்பிடும் 268 கண்ணிகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

**நெடுவினாக்கள்**

1.தூது அனுப்பத் தமிழே சிறந்தது – தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

**தூது**

கிளி, அன்னம், விறலி, பணம், தந்தி, நெஞ்சம்,தென்றல் என்று பல தூது வாயிகளைப்பற்றி அறிந்திருக்கிறோம்.
தமிழை தூதுப் பொருளாக்கி அதன் இனிமை, இலக்கிய வளம், பாச்சிறப்பு சுவை, அழகு, திறம், தகுதி ஆகியவை தமிழ்விடுதூது மூலம் விளக்கப்படுகிறது.

**விண்ணப்பம்**

அறிவால் உண்ணப்படும் தேனாக விளங்கும் தமிழே உன்னிடம் நான் மகிழ்ந்து விடுக்கும் வேண்டுகோளினைக் கேட்பாயாக.

**பெருமை**

உன்னிடமிருந்து குறவஞ்சி, பள்ளு போன்ற சிற்றிலக்கியங்களும் மூவகைப் பாவினங்களிலும் புலவர்கள் பாக் கைவரப் பெற்றவர்கள்.

சிந்தாமணியாய் இருக்கும் உன்னைச் சிந்து என்று கூறும் உன் பெருமைக்கு வேறு யாரும் உள்ளனவோ.